உ

# திருமங்கலம் கோயில் வரலாறு



கோயில் விமானத் தோற்றம்

✸

தேவஸ்தான வெளியீடு

# திருமங்கலம் கோயில் வரலாறு

திருச்சிராப்பள்ளி

ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,

'அற்புதக்கனி' — 'திருமுருகாற்றுப்படை விளக்கம்' ஆசிரியரும்,

அறநிலையப் பாதுகாப்பின் (H. R. & C. E.) ஆதரவில்

பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய

**திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்**

எழுதப்பெற்று

திருமங்கலம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி

திரு. M.Nவீராசாமி நாயுடு அவர்கள்,

Visitors:

திரு. T. S. மீனாட்சிசுந்தர முதலியார் B. A., அவர்கள்,

திரு. A. நமசிவாயம் செட்டியார் அவர்கள்,

திரு. T. V. ரெங்கசாமி அய்யர் B A., அவர்கள்,

ஆகியோரால் வெளியிடப்பெற்றது.


தேவஸ்தான வெளியீடு

1955


உரிமை செய்யப்பெற்றது] [விலை 3 அணா.

# முன்னுரை

தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாக ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்கள் விளங்குகின்றன. அவைகளுள் திருச்சிராப்பள்ளி ஜில்லா, லால்குடி தாலூகாவில், வடகரை மேல் மழ நாட்டில் பூவாளூருக்கு மேற்கில் திருமங்கலம் என்னும் திருக்கோயில் உள்ளது. பரசுராமர் வழிபட்டுப் பரசுபெற்றது. வேய்ங்குழலிசையால் ஈசனருள் பெற்ற ஆனய நாயனார் அவதரித்த இடம். பல கல்வெட்டுக்களையுடையது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி இவ்வரலாறு பூவாளூர்ப் புராணத்தைத் தழுவிச் சுருக்கமாய் எழுதப்பெற்று, H. R. & C. E. உதவி ஆணையாளர் (Asst. Commissioner) திரு. K. சோமசுந்தர தேசிகர் M. A., அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தலப் பெருமைகளை வரலாறுகளாக வெளியிடச் செய்வதிலும் தற்போதுள்ள தலைவர்கள், தக்கன செய்து வருகின்றார்கள். இதில் கோயில் விளக்கமும், வரலாறுகளும். கல்வெட்டுக்களும், துதிப் பாடல்களும் சேர்க்கப்பெற்றுள்ளன. கல்வெட்டுக்களால் பழங்காலச் செய்திகள் பல தெரிய வருகின்றன. அன்பர்கள் படித்துத் திருமங்கலநாதரின் திருவருளைப் பெறுவார்களாக.

திருச்சிராப்பள்ளி,
மலைக்கோட்டை.
24—7—55.

**R. பஞ்சநதம் பிள்ளை,**
தமிழ் ஆசிரியர்.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கோயிலும் இருப்பிடமும் | ... 1– 4 |
| 2. | கோயிலின் அமைப்பு | ... 4 |
| 3. | கோயிலின் படம் | ... 5 |
| 4. | மூர்த்திகளின் பெயர்கள் | ... 6 |
| 5. | தீர்த்தங்கள் | ... 6 |
| 6. | தலப் பெருமைகள் | ... 7 |
| 7. | திருப்பணிகள் | ... 9 |
| 8 | சிற்பங்கள் | ... 9 |
| 9. | சுற்றுக் கோயில்கள் | ... 10 |
| 10. | தினப் பூஜையும், திருவிழாக்களும் | ... 10–12 |
| 11. | வருமானமும், சொத்துக்களும் | ... 12 |
| 12. | நிர்வாகம் | ... 12 |
| 13. | புராண வரலாறுகள் | ... 13–18 |
| 14. | கல்வெட்டுக்கள் | ... 18-23 |
| 15. | துதிப் பாடல்கள் | ... 24–28 |


# கோயில் விளக்கம்

*கோயில்* — திருமங்கலம், பரசுராமீஸ்வரம்

*மூலவர்* — ஸ்ரீசாமவேதீஸ்வரர்–திருமழுவுடையார்

*அம்மன்* — லோகநாயகி–உலகுடைய நாயகி

*தீர்த்தம்* — பற்குனி நதி–கூழையாறு

*மரம்* — கொன்றை மரம்

*அடியார்* — ஆனாயநாயனார்

*வழி* — திருச்சிராப்பள்ளி ஜில்லா, லால்குடி தாலூகா பூவாளூருக்கு மேற்கில் உள்ளது.

# திருமங்கலம் கோயில் வரலாறு

*பொங்கரில் வண்டு புறம்பலே சோலைகள் மேலோடும்*
*வெங்கதிர் தங்க விளங்கிய மேல்மழ நன்னாடாம்*
*அங்கது மண்ணின் அருங்கலமாக அதற்கேயோர்*
*மங்கலமானது மங்கலமாகிய வாழ்மூதூர்.*

—**பெரிய புராணம்.**

## 1 கோயிலும், இருப்பிடமும்

யாவற்றையுங்கடந்த பரம்பொருளாகிய இறைவன் உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும்வண்ணம் தன் கடந்த நிலையான அருவ நிலையிலிருந்து இறங்கி இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளி யிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறான். அத்தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் மறைந் திருந்தபோதிலும் மடியின் மூலமாகவே பால் வெளிப்படு வது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்தபோதிலும். பளிங்குக்கல்லின் மூலமே கிரணங்கள் விரைவில் வெளிப் படுவது போலவும், நிலத்துக்கடியில் நீர் இருந்தாலும் தோண்டிய இடத்தில் தானே நீர் தோன்றுவதுபோலவும். இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும் பெரியோர் கள் அமைத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளின் மூல மாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான்.

*"இருஞ்சுரபிக்கெங்கும் உருக்காண ஒண்ணாத பால்*
*முலைப்பால் விம்மி ஒழுகுவதுபோல வெளிப்பட்டருள்வன்*
*அன்பர்க்கே"*

**(சிவஞான சித்தியார்)**

*"எங்கும் சிவனிருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்
ஆவினுடம்பெல்லாமும் ஆவரித்து நிற்கினும் பால்
பாவுமுலைக் கண்மிகுதிப்பார்"*

(சிவஞானப்பிரகாச வெண்பா)

ஆதலின் பெறுதற்கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும் கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் சென்று, அவனருளைப்பெற முயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப்பிறவி தானும் வகுத்தது மனவாக்காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார்.

நமது முன்னோர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னோர்கள் எடுப்பித்த திருக் கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றி பெருஞ் சிற்பங்கள் நிறைந்த பெட்டகங்களும் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் நிறைந்துள்ள இடம் (Power House) போலத் தெய்வீகத் திருவருள் அணுக்கள் செறிந்துள்ள சிறப்பிடங்களாகும். இவைகளை நம் முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப்பின் வழியினராகிய நமக்கு அருஞ்செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்குக் கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. 'கோயில் விளங்கக் குடி விளங்கும். ஆலயந்தொழுவது சாலவும் நன்று' என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள். முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத்

தலைவர்களால் பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக்கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப் பாடல் பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப்பெற்ற அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன.

என்றும் வற்றாத நீர் வளமுடைய காவிரி நதி பாயும் சோழ நாட்டில், திருச்சிராப்பள்ளி ஜில்லா, லால்குடி தாலூகாவில், வடகரை மேல் மழ நாட்டில், பொன்னி நதிக்கும் முனிவர் எழுவர் போற்றிய திருத்தவத்துறைக்கும் வடபால் பூவாளூருக்கு மேற்கில், பற்குனி நதிக்குத் தெற்கில் திருமங்கலம் என்னும் சிறந்த தலம் உள்ளது. இதற்குச் சரக்கொன்றைவனம், பலாவனம், பனசவனம், அருச்சுனவனம், சாமவேதபுரம் என்னும் பெயர்களும் வழங்கும். கல் வெட்டுக்களில் பரசுராமீஸ்வரம், திருவிருந்தமங்கலம் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. இலக்குமி சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றதால் திருமங்கலம் எனப் பெயர் அமைந்ததாகக் கூறுவர்.

*"மலர்ந்த கமலத்தவிசின் மங்கையங்கண் வீற்றிருந்த*
*அலர்ந்த கடுக்கைத்தொடையார் அடிமலர்ப்பூசனைபுரிந்து*
*நலந்திகழ் மாயவன் மார்ப நண்ணினள் ஆதலினந்தத்*
*தலந்தனை யாவரும் மொழிவர் தகுந்திருமங்கலமென்றே".*

இத்தலத்துக்குப் பக்கங்களில் மங்கலம் என்னும் முடிபைக்கொண்ட பல ஊர்கள் உள்ளன. அவை சாத்தமங்கலம், இடையாற்றுமங்கலம், நன்னிமங்கலம், கொத்தமங்கலம், கீழ்மாரிமங்கலம், தாமோதரமங்கலம் முதலியன. இத்தலத்துக்குக் கிழக்கில் பூவாளூரும், தெற்கில் மாந்துறையும், மேற்கில் நகரும், வடக்கில் புதூர் உத்தமனூரும் எல்லைகளாக உள்ளன. தென்னிந்திய இருப்புப்பாதையில். திருச்சி — விழுப்புரம் குறுக்குப்பாதையில் லால்குடி ரயில்வே நிலையத்திலிருந்து வடக்கே பூவாளூர் வழியாக 3 மைல் தூரத்திலும், மாந்துறை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே நகர் வழியாக

2 மைல் தூரத்திலும் இத்தலம் உள்ளது. புகைவண்டி மார்க்கமாகவும், மோட்டார் (Bus) மார்க்கமாகவும் இத்தலத்தை அடையலாம். பஞ்சாயத்து ஆட்சியில் சேர்ந்தது. இவ்வூரில் ஜில்லா போர்டைச் சேர்ந்த தொடக்கப் பள்ளியும், தபால் ஆபீசும் உள்ளன. ஜனத்தொகை சுமார் 2000, முத்துராஜா, முதலியார், சாலியர், செங்குந்தர், தபதி ஆகிய பல வகுப்பினர் உள்ளனர். இவ்வூருக்குப் பக்கத்தில் பனங்காட்டாங்குடியில் நெசவுக் கைத்தொழில் நடைபெறுகிறது.

## 2. கோயிலின் அமைப்பு

மருத நிலமாகிய நன்செய் நிலங்கள் சூழ்ந்த நீர்வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் கோயில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் ஆறுகளும், வாய்க்கால்களும் ஓடுகின்றன. திருமங்கலத்தை "அலைமலிந்த புனல்மங்கை" என்று சுந்தரர் கூறுகின்றார். கோயில் கிழக்கு நோக்கியுள்ளது. முன் வாயிலுக்கு கோபுரமில்லை. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்மன் சந்நிதி தெற்கு நோக்கியும் உள்ளன. கோயிலுக்குள்ளே ஓர் பிராகாரமும், வெளிப்பிராகாரமும், தேரோடும்வீதியும் ஆகமூன்று பிராகாரங்கள் உள்ளன. உள் பிராகாரத்து மேல்வரிசையில் சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், சண்முகர், கஜலட்சுமி முதலிய சந்நிதிகளும் ஆனாய நாயனார், அவருக்கு காட்சி தந்த அம்மனும், லிங்கமும், வடக்கில் நடராஜ மண்டபமும், கிழக்கில் சூரியன், சந்திரன் சிலைகளும், தெற்கில் மடைப்பள்ளியும், கிணறும் உள்ளன. கர்ப்பக் கிரகத்தில் நான்கு தூண்கள் உள்ளன. வெளியில் அம்மன் சந்நிதி தெற்கு நோக்கி உள்ளது. 2-ம் பிராகாரத்தில் வடக்கில் வசந்த மண்டபமும், வாகன மண்டபமும் உள்ளன. அம்மன் கோயிலுக்குத் தெற்கில் தேவஸ்தான அலுவலகம் (Office) உள்ளது. தல விருட்சம் கொன்றை மரம். தேரோடும் வீதியில் மூன்று மூலைகளில் விநாயகர் கோயில்கள் உள்ளன. கோயிலின் சுற்றளவு கிழமேலடி 260, தென்வடலடி 140. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## 3. கோயிலின் படம்




**எண்களின் விளக்கம்**

1. முன்வாயில்
2. உள்வாயில்
3 மடைப்பள்ளி
4. சோமாஸ்கந்தர்
5. விநாயகர்
6. சுப்பிரமணியர்
7. தண்டபாணி
8. இலக்குமி
9. ஆறுயர், லிங்கம், அம்மன்
10. நடராஜர்
11. மூலவர் வாயில்
12. சாமவேதீஸ்வரர்
13. லோகநாயகி
14. அலுவலகம்
15. வசந்த மண்டபம்
16. கிணறு
17. சூரியன், சந்திரன், பைரவர்
18. பரசுராமர் தீர்த்தம்

## 4. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் பெருமானுக்கு சாமவேதீஸ்வரர் என்னும் பெயர் வழங்குகிறது. ஜைமினி முனிவர் ஏகமாக இருந்து சாமவேதத்தை ஆயிரம் சாகைகளாகப் பிரித்து விளக்கியதால் இப்பெயர் ஏற்பட்டது. மேலும் மங்கலேச்சுரர், அமுதேச்சுரர், இரத்தினேச்சுரர் என்னும் பெயர்களும் வழங்கும். கல்வெட்டுக்களில் பரசுராமீஸ்வரம் உடைய மகாதேவர், பரமேஸ்வரர், திருமழுவுடைய நாயனார், சந்திரசேகர தேவர். உலகுடைய நாயகி, என்னும் பெயர்கள் காணப்படுகின்றன. பரசுராமர் வழிபட்ட இடத்தையுடைய தேவனாதலாலும், மழுவாயுதத்தைக் கொண்டிருப்பதாலும், பிறைச்சந்திரனைச் சூடியிருப்பதாலும் இப்பெயர்கள் ஏற்பட்டன. அம்மன் பெயர் லோகநாயகி என்பது. அறுபத்து மூன்று நாயன்மார்களில்—சிவனடியார்களில் ஆனாய நாயனார் இத்தலத்தில் அவதாரம் செய்து முத்திபெற்றார்.

## 5. தீர்த்தங்கள்

1. **கயாபற்குனி :—** பெருமான் தனது திருவடிச் சிலம்பை வீசி எறிந்த இடத்தில் உண்டானது. பாவங்களைச் சிறிதாகப்பண்ணும் திறத்தால் பற்குனி என்று பெயராயிற்று. இதன் வரலாறு பின்னே சேர்க்கப் பெற்றுள்ளது. இது தென் வடலாகவும், பிறகு மேற்கிலிருந்து கிழக்காகவும் ஓடுகிறது. பச்சை மலையிலிருந்து ஓர் ஆறு-உப்பாறு இவ்விடத்தில் பற்குனியில் வந்து சேர்வதால் எப்போதும் நீர்வள முற்றதாய் உள்ளது.

2. **கூழையாறு :—** இத்தலத்தில் பற்குனியிலிருந்து பிரிந்து வடக்கு தெற்காகவும், பிறகு மேற்கிலிருந்து கிழக்காகவும் ஓடுகிறது.



ஆனாய நாயனார்—மூலவர்

3. **பரசுராம தீர்த்தம் :—** 2-ம் பிராகாரத்திலுள்ள கிணறு, பரசுராமரின் நினைவாக ஏற்பட்டது. கோயிலுக்குள் மற்ருேர் கிணறு உள்ளது. கிணற்றில் நீர் ஊற்று இருந்து கொண்டிருப்பதுபோல், கோயிலில் பெருமானுடைய திருவருள் ஊற்றும் நிறைந்துள்ளது.

## 6. தலப் பெருமைகள்

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கொள்ளிடத்திற்கு வடபால் மழநாடு என்னும் பகுதி இருந்தது. இது மேல் மழநாடு, கீழ் மழநாடு என்னும் இரண்டு பிரிவுகளை உடையது. மேல்மழ நாட்டிற்குத் திருத்தவத்துறை (லால்குடி) தலை நகராகவும், கீழ்மழ நாட்டுக்குத் திருமழபாடி தலை நகராகவும் இருந்தன. இதில் வாழும் அந்தணர்களுக்கு மழநாட்டுப் பிரகச் சரணத்தார் என்ற பெயர் வழங்கி வருகிறது. இம்மழ நாட்டில் வெள்ளையூர்க் கண்டம், பாச்சில் கூற்றம், இடையாற்று நாடு, கலார்க்கூற்றம் முதலிய பிரிவுகள் இருந்தன. பிற்காலத்தில் இப்பெயர்கள் பலவாறு மாறின. கொல்லி மழவன் என்னும் அரசன் இந்நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இந்த மழ நாட்டுத் தலைவர்களுக்கு மழவர், மழவராயர் என்ற பெயர்கள் உண்டு.

வடகரைமேல் மழ நாட்டில் கலார் கூற்றத்தைச் சேர்ந்தது திருமங்கலம் என்னும் மூதூர் ஆகும். நீர் வளம் மிகுந்த சோலைகளுக்கு நடுவில் அமைந்துள்ளது. "அலைமலிந்த புனல்மங்கை" என்று சுந்தரர் இத்தலத்தைக் குறிக்கிருர். சோலைகளில் வண்டுகள் ஒலித்துக் கொண்டிருக்கும். சோலைகள் கதிரவனின் வெப்பத்தை மேலே தடுத்துக் கொள்ளும். இத்தகைய பெருமைகளையுடைய மேல் மழநாடு, இம்மண்ணுலகத்துக்கு அரிய

ஆபரணம்போல் அமைந்துள்ளது. அதற்கு ஓர் மங்கல மாக விளங்குவது திருமங்கலம் ஆகும். இதைக் குறித் துச் சேக்கிழார் பாடிய "பொங்கரில் வண்டு" என்னும் பாடல் தலைப்பில் காட்டப் பெற்றுள்ளது. இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றிலும் சிறப்புடை யது. பாவங்களைப் போக்கும் பற்குனி நதியை உடை யது. நகர வாழ்க்கையில் மன அமைதி பெறமுடியாமல் அல்லற்படும் மாந்தர்களுக்கு மன அமைதியை உண்டாக் கும் இடம். மேலும் இத்தலம் புராணப் பெருமைகளை யுடையது. சேக்கிழார் பாடிய பெரிய புராணமும், கச்சியப்ப முனிவர் பாடிய பூவாளூர்ப் புராணமும் இதன் பெருமைகளைக் கூறும். கொன்றைமாலை அணிந்த சிவ பெருமானைப் பரசுராமர் வழிபட்டுப் பரசுபெற்ற தலம். இதை "விரைசெய்நறும் பூந்தொடை இதழிவேணியர்தம் கழல்பரவிப் பரசுபெறுமாதவ முனிவன் பரசுராமன் பெறு நாடு" என்று சேக்கிழார் கூறுகிறார். மேலும் பரசுராமர் தன் தாயைக் கொலை செய்த கொலைப்பாவம் நீங்கப் பெற்றார். இவருடைய உருவச் சிலையும் உள்ளது. இதனால் கல் வெட்டுக்களில் இத்தலம் பரசுராமீஸ்வரம் என்றும், பெருமான் திருமழுவுடைய நாயனார் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வேய்ங்குழல் வாசித்து வீடு பெற்ற ஆனாய நாயனார் அவதரித்த இடம். இரயிக்குவ முனிவன் தவஞ்செய்து பற்குனியை வரச்செய்து தன் முன்னோர்களை வாழ்வித்தபதி. சியவன முனிவனாலும், உதங்க முனிவனாலும் இந்திரனுக்கு ஏற்பட்ட சாபங்கள் நீங்கப்பெற்ற தலம். இலக்குமி வழிபட்டுப் பூஜித்ததால் திருமங்கலம் எனப் பெயர் பெற்றது. குபேரன் வழி பட்டுப் பேறுபெற்றான். இரதி தேவிக்குப் பதியளித்த சிறப்புடையது. இவைகளில் சில வரலாறுகள் பின்னே கூறப்பெற்றுள்ளன. ஒரு வருட காலமாக வெள்ளிக் கிழமை தோறும் வார வழிபாடு நடைபெற்று வருகிறது.



பரசுராமர்

## 7. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய திருக்கோயில்களுக்கு எவ்வித தீங்கும் நேராதபடி அவ்வப்பொழுது ஆவன செய்து பாதுகாத்தல் வேண்டும். புதிய கோயிலை அமைப்பதைப் பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும். "புதிதுறப் பணிகள் வேறு புரிவதிற் பழயதொன்றை விதியுளி புதுக்குவோர்க்கு மிக்க புண்ணியந்தான் எய்தும்" என்று ஆன்றோர் கூறியுள்ளார். அதன்படி இத்தலத்தில் 1922ம் ஆண்டில் திருப்பணிகள் தொடங்கப்பெற்று, முதலில் வசந்த மண்டபம், திருமதில்கள், முன்வாயில், உள் மண்டபம் முதலியவைகள் புதுப்பிக்கப் பெற்றன. இத் திருப்பணிகள் திரு. ஜம்புலிங்க முதலியார் அவர்கள் தர்ம கர்த்தராக இருந்த காலத்தில் தேவஸ்தான நிதியிலிருந்து சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் செலவழித்து நடத்தப் பெற்றுப் பிரமாதி ஆண்டு ஆனி மாதம் 12-ம் நாள் (26—6—1939)ல் கும்பாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற்றது. மேலும் முன் கோபுரம் முதலிய பல திருப்பணிகள் செய்யவேண்டியிருப்பதால், அவைகளை நிறைவேற்றி வைக்கும் வகையில் சிவநேசச் செல்வர்கள் ஒல்லும் வகையில் உதவி செய்வார்களாக.

## 8. சிற்பங்கள்

தென்னாட்டுக் கோயில்களில் பல வகைச் சிற்பங்களையும், ஓவியங்களையும் காணலாம், இக்கோயிலில் சுவாமி கோயிலின் விமானத்தைச் சுற்றிலும் பல புராணக் கதைகளை விளக்கும்படியான சிலைச்சிற்பங்களும், சொற் சிற்பங்களாகிய கல் வெட்டுக்களும் உள்ளன, பெருமானுடைய அடிமுடி தேடியது, மகிடாசுரவதம் செய்தது,

சிம்ம வாகனத்தில் தேவி அமர்ந்திருப்பது முதலிய சிறு சிறு வடிவங்கள் அடிவரிசையில் அமைந்துள்ளன. அர்த்த மண்டபத்தில் நான்கு பழமையான தூண்கள் உள்ளன. முருகன் சந்நிதியில் முருகனுக்கும், வள்ளிக்கும் மயில் வாகனங்கள் உள்ளன. ஆனுய நாயனரின் மூலவர் சிலையும், உற்சவச் சிலையும், பரசுராமர் சிலையும் அழகாகச் செய்யப் பெற்றுள்ளன. வெளி மண்டபத்தின் மேல் விட்டங்களில் மீனின் வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர் இழுக்க உபயோகப்பட்டு வந்த தேர்ச் சங்கிலி இருக்கிறது. எனவே இக்கோயிலில் அழகிய சிற்பக் கலைகள் நிறைந்துள்ளன. இவ்வூரில் உலோகத் தொழில்களும் (Metal Works) நடைபெற்று வந்ததாகச் சொல்லப்படுகிறது.

## 9. சுற்றுக் கோயில்கள்

இத்தலத்தைச் சேர்ந்த சுற்றுக் கோயில்களாகத் தாராஞர் என்னும் பண்டாரவாடையில் ஏழு பிடாரியம்மன் கோயில், மாரியம்மன் கோயில், விநாயகர் கோயில், தண்டாயுதபாணி கோயில் முதலிய கோயில்கள் இருக்கின்றன. இவைகளுக்கு விளக்கெரிக்க எண்ணெயும், பூஜைக்கு நெல்லும் கொடுக்கப் படுகின்றன. ஏழு பிடாரியம்மனின் உற்சவசிலை மட்டும் இக்கோயிலில் உள்ளது. மேலும் பனங்காட்டாங்குடியில் ஐயனர் கோயிலும், தெற்கில் பிடாரி கோயிலும், பெருமாள் கோயிலும் தனி நிர்வாகத்தில் இருந்து வருகின்றன.

## 10. தினப்பூஜையும், விழாக்களும்

இக்கோயிலில் தினந்தோறும் காலை, உச்சி, மாலை, இரவு ஆகிய நான்கு காலங்களிலும் அபிடேக ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. பல கட்டளைகளும் நிகழ்ந்து வருகின்றன. அவைகளின் விவரம் :—

1. நவராத்திரி 6-ம் நாளிலும், கார்த்திகை 3-வது சோமவாரத்திலும், மகா சிவராத்திரி 2-ங் காலத்திலும் பூஜை வழிபாட்டிற்காக 2 ஏகர் நன்செய் நிலம் மூல தனமாக வைக்கப்பட்டுள்ளது. இவைகள் புதூர், துரை-கந்தசாமி உடையார் மூலமாக நடைபெற்று வருகின்றன.

2, தேர்விழா:- உச்சிக்காலக் கட்டளை. இந்தவழி பாட்டுக்காக நன்செய் 16-30 செண்டும், புன்செய் 19-33 செண்டும் நிலங்கள் உள்ளன. தேவஸ்தானச் சார்பில் நடந்து வருகிறது.

3. பிரம்மோற்சவமாகிய பெருவிழா :- 5-ம் நாளில் திருவிளக்குக்காக 4 ஏகர்-15 செண்டு நிலங்கள் தாரா னூரில் உள்ளன.

4. பெருவிழாவில் 8-ம் நாளிலும், நவராத்திரி வெள்ளிக்கிழமையிலும், கார்த்திகை முதல் சோமவாரத் திலும், மகா சிவராத்திரி முதல் காலத்திலும் பூஜை வழி பாடுகளுக்காக 1 ஏகர் 8 செண்டு நிலம் உள்ளது, தேவஸ்தானச் சார்பில் இக்கட்டளைகள் நிகழ்ந்து வரு கின்றன.

5. பெருவிழா 10-ம் நாளிலும், மார்கழித் திருவா திரை நாளிலும் பூஜைகளுக்காக 1 ஏகர் 8 செண்டு நிலங் கள் உள்ளன.

6, ஐப்பசி மாதம் அன்னபிஷேகத்திற்காக 1 ஏகர் 17 செண்டு புன்செய் நிலங்கள் உள்ளன. இது திருமங் கலம் பெரியண்ணசாமி முத்திரியர் மூலம் நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பெருவிழா நடைபெறுவது வழக்கம். மாத விழாக்கள் மட்டும் அவ் வப்போது நடைபெற்று வருகின்றன. தை வெள்ளி,

ஆடி வெள்ளி நாட்களிலும், கந்தர் சஷ்டி நாட்களிலும், கார்த்திகை சோமவாரங்களிலும் முன் சொல்லிய கட்டளைகளின்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மார்கழித்திருவாதிரை நாளில் நடராஜா புறப்பாடு உண்டு. முக்கியமாக கார்த்திகை மாதம், அஸ்த நாளில் ஆளுடைய நாயனுருக்கு விழா நடைபெறும். அந்நாளில் விசேட வழிபாடும், இரவில் விநாயகர், முருகர், பெருமான், பிராட்டி, சண்டிகேசர் ஆகிய பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் நடைபெறும்.

## 11. வருமானமும், சொத்துக்களும்

இக்கோயிலுக்குச் சுமார் 200 ஏகர் நன்செய் நிலங்களும், 52 ஏகர் புன்செய் நிலங்களும் உள்ளன. இவைகள் தாரானூர் என்னும் பண்டாரவாடை, திருமங்கலம், பூவாளூர், பல்லாவரம், புதூர், ஆங்கரை முதலிய கிராமங்களில் இருக்கின்றன. ஆண்டுதோறும் குத்தகையின் மூலம் சுமார் முப்பதாயிரம் ரூபாய் வரும். சுமார் இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகள் உள்ளன.

## 12. நிர்வாகம்

இக்கோயிலின் நிர்வாகம் ஆதியில் லால்குடி தேவஸ்தான கமிட்டியாரின் மேற்பார்வையில் இருந்துவந்தது. பிறகு 3—4—45ல் திட்டம் (Scheme) ஏற்பட்டுத் தற்போது சென்னை அறநிலையப் பாதுகாப்பின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. ஷை பாதுகாப்பினரால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரி (Paid Trustee) கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார். இவர் காலத்தில் பல வழக்குகளில் சிக்கியிருந்த நிலங்கள் கோயிலுக்குச் சேர்ந்தன. மேலும் கோயில் காரியங்களைக் கவனிப்பதற்காக மூன்று மேற்பார்வையாளர்கள் (Visitors) நியமிக்கப்பெற்றிருக்கிறார்கள்.

## 13. புராண வரலாறுகள்

இத்தலத்தைப் பற்றிய பெருமைகளும், வரலாறு களும் சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணத் திலும், கச்சியப்ப முனிவர் பாடிய பூவாளூர்ப் புராணத் திலும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளில் சில சுருக்க மாகக் கூறப்படும்.

1. **கயாபற்குனி வரலாறு:—** திருமங்கலமாகிய இத் திருப்பதியில் இரயிக்குவன் என்னும் முனிவன் ஓர் ஆச்சி ரமத்தில் இருந்துகொண்டு தவஞ்செய்து வந்தான். அவன் முடவனுதலின் ஓர் குதிரையும் தேரும் வைத்திருந்தான். ஒரு நாள் சுந்தரன் என்னும் அரசன், காட்டிற்கு வேட் டையாட வந்தபோது முனிவனுடைய மானைக் கொன்று விட்டான். இச்செய்தியை இரயிக்குவன் கேள்விப்பட் டுப் புறப்பட்டுச் சென்றான், வழியில் நரகம் போன்ற ஓர் பாழும் கிணற்றிலிருந்து "எங்களைக் காப்பாற்றுக— காப்பாற்றுக" என்று ஓர் சத்தம் உண்டாயிற்று. முனிவன் நெருங்கிப் பார்த்தபோது முனிவனுடைய முன்னோரான பிதிரர்கள் இவ்விதம் சத்தமிட்டதாகத் தெரிந்தது. முனிவன் அவர்களுக்குத் தன் தவத்தால் நற்பதவி அளிப்பதாக ஆறுதல் கூறி அப்பால் சென்று தன் மானைக் கொன்ற சுந்தர அரசனைச் சாபத்தால் அழித்துவிட்டுப் பூவாளூரை அடைந்து பெருமானை வழிபட்டுத் தவஞ்செய்தான். அப்போது பெருமான் தன் திருவடிச் சிலம்பை வீசி எறியவே, அது திருமங் கலத்துக்கு மேற்கில் விழுந்தது. அவ்விடத்தில் ஓர் கங்கை உண்டாயிற்று. அதனுடன் கயாநதியுங் கலந்து பற்குனியாக ஓடியது. இதை "சேவார் கொடியார் சேவடியின் சிலம்பு வாங்கி எறிந்திட்டார், தாவாத்திரு மங்கலம் மேல் பாற்றழுங்கி விழுந்தது மாதோ" என்றும்,

"சிலம்பு விழுந்த இடநின்றும் செழுநீர்க்கங்கையெழுந் தொழுகிற்று அலம்பு மணிநீர்ப்பெருங் கங்கையதனே டெழுந்து கயைதானும் நண்ண" என்றும் பூவாளூர்ப் புராணம் கூறுகிறது. பாவங்களைச் சிறிதாகச் செய்வ தால்-போக்குவதால் பற்குனி என்று பெயராயிற்று. "பாவ முழுதும் சிறிதாகப் பண்ணும் திறத்தால் பற்குனி யென்றேவில் பெயரும் இத்தலஞ்சேர் ஒலி நீர்க் கங்கை தனக்கெய்தும்" என்று புராணம் கூறுகிறது. பிறகு இரயிக்குவ முனிவன் பற்குனி நதியில் நீராடிப் பிதிர்க் கடன்களை முடித்துப் பெருமானையும் வழிபட்டான். கிணற்றில் சிறைப்பட்டுக் கிடந்த முனிவனின் பிதிரர்கள் வெளிப்பட்டு முனிவனை வாழ்த்தி விமானத்திலேறிச் சிவ லோகஞ் சென்றார்கள். இரயிக்குவனும் திருமங்கலத் துக்குத் திரும்பி வந்து பல காலம் வாழ்ந்து முத்தியுலகம் அடைந்தான்.

(இது பகீரதன் தன் முன்னோர்களுக்காக கங்கை யை வரச்செய்த வரலாற்றைப்போல் உள்ளது.)

2. **இந்திரன், சாபம் நீங்கப்பெற்றது :—** பிருகுமுனி வனின் புதல்வனான சியவனன் என்பவன் சுகன்னி என் பவளை மணந்து வாழ்ந்து வந்தான். சுகன்னி தன் கண வனுக்குச் செய்யவேண்டிய தொண்டுகளைச் செய்து வந்தாள். தேவ வைத்தியர்களான அசுவினி தேவர் களின் உதவியால் சியவனன் இளமையைப் பெற்றான். அந்த நன்றிக்காகச் சியவனன் ஓர் வேள்வி செய்து, அதன் சோமபானத்தை அசுவினி தேவர்களுக்கு வழங்க எண்ணித் தன் மாமன் சையாதி என்பவனைக் கொண்டு வேள்வி நடத்தினான். இதையறிந்த இந்திரன் சியவனனிடம் வந்து, அசுவினி தேவர்களைப் பற்றிக் குறை கூறி அவர்களுக்கு அவிர்ப்பாகம் தரக் கூடா

தென்று தடுத்தான். முனிவன் இந்திரனை லட்சியம் செய்யாமல் அசுவனி தேவர்களுக்கே அவிர்ப்பாகத்தை வழங்கினான். இந்திரன் மீண்டும் புறப்பட்டு வந்து தன் வச்சிரப்படையால் போர் செய்யத் தொடங்கினான். சியவனன் தன் தவ வலிமையால் இந்திரனுடைய செல்வங்கள் யாவும் நீங்கும்படிச் சாபமிட்டான்.

திருமங்கலத்தில் உதங்க முனிவன் என்பவன் தன் முதுமையை நீக்கத்தக்க அமுதம் பெறவேண்டி ஓர் பலா மரத்தினடியில் தவஞ் செய்து வந்தான். இவன் செய்யும் தவத்தால் ஏற்படும் அக்கினி எங்கும் பரவித் தகிக்கவே அதைப் பொறுக்கலாற்றாத தேவர்கள் கைலாசம் சென்று பெருமானிடம் முறையிட்டனர். பெருமான் இந்திரனை உதங்க முனிவனுக்கு அமுதங் கொடுக்கும்படி கட்டளையிட்டான். இந்திரன் வஞ்சனையால் நீச வேடம் பூண்டு அமுதம் வழங்கச் சென்றான். உதங்க முனிவன், இந்திரன் வஞ்சகத்தை ஞானத்தாலறிந்து, அமுதத்தை வாங்காமல் மறுத்து இந்திரனைக் கடிந்துபேசி, அவன் செல்வங் கெடவும், வச்சிராயுதம் அழியவும் சாபமிட்டான்.

இவ்வாறு சியவனன்-உதங்கன் என்னும் இரு முனிவர்களின் சாபம் ஏற்ற இந்திரன், ஒன்றும் செய்ய முடியாதவனாய்த் தன் குருவான வியாழனிடம் சென்று முறையிட்டான். குரு, இந்திரனுக்கு நல்லுரைகள் கூறி உதங்கனிடம் மீண்டும் சென்று அமுதம் கொடுத்து அம்முனிவன் மூலமாகவே சாப நீக்கம்செய்து கொள்ள உபதேசித்தான். இந்திரனும் குரு மொழியை ஏற்றுக்கொண்டு உதங்க முனிவனிடம் சென்று அமுதங் கொடுத்தான். முனிவன் அமுதத்தைப் பெற்றுக் கொண்டு இந்திரனிடம் தானிட்ட சாபமும், சியவனன்

இட்ட சாபமும் நீங்கவேண்டித் திருமங்கலம் சென்று ஸ்ரீசாமவேதீஸ்வரரையும், வில்வவனப்பெருமானையும்வழி பட்டுப் பழைய செல்வங்களை அடையும்படி உபதேசித் தான், அவ்வாறே இந்திரன் திருமங்கலம் சென்று சாம வேதீஸ்வரரை வழிபட்டுப் பூவாளூர் சென்று திருமூல நாதரையும் வணங்கினன். பெருமான் அப்போது காட்சி கொடுத்து இந்திரனுடைய சாபங்களை நிவர்த்தி செய்து சகல சம்பத்துடன் வாழக்கடவாய் என்று திருவாய் மலர்ந்தருளினர். இந்திரனும் தன் இருப்பிடம் சென்று சுகமாய் வாழ்ந்தான். இதனால் குணமென்னும் குன்றேறி நின்ற முனிவர்களின் கோபத்தால் ஏற்படும் சாபத்தைத் தடுத்தல் அரிது என்பது புலனுகிறது.

3. **ஆனய நாயனர் வரலாறு** :— காவிரி பாயும் சோழ நாட்டில், வடகரை மேல் மழ நாட்டைச் சேர்ந்த, அலை மலிந்த புனல்சூழ்ந்த திருமங்கலத்தில் ஆயர் குலத்தில் ஆனயர் என்பவர் வாழ்ந்து வந்தார், இவர் மற்ற இடை யர்களுடன் பசுக்களைக் காட்டுக்கு ஓட்டிச் சென்று வரு வதோடு, வேய்ங்குழலில் — புல்லாங்குழலில் பஞ்சாட்சர மாகிய ஐந்தெழுத்தை இசையுடன் வாசித்து எல்லோரை யும் மகிழ்வித்து வந்தார்,

ஒரு நாள் ஆனயர் தமது முடியில் கண்ணிமாலை சூடி, நறுவிலிப்பூப்புனைந்து, காதில் செங்காந்தள் பூவைச் செருகி, நெற்றியிலும் மார்பிலும் திருநீற்றை நிறையப் பூசி, முல்லை மாலை தரித்து, அறையில் மரவுரியும் அதன் மேல் அழகிய பட்டும் உடுத்தித் திருவடியில் மிதியடி பூண்டு, கையில் வெண்கோலும் வேய்ங்குழலும் கொண்டு இடையர்களும், பசுக் கூட்டமும் தம்மைச் சூழ்ந்துவரக் காடு நோக்கிச் சென்றார். அவ்விடத்தில் மாலையைப்போல் பூங்கொத்துக்களைத் தாங்கிக்கொண்டு



ஆனைய நாயனார்—உற்சவர்

சிவபெருமானைப்போல் விளங்கி நின்ற ஓர் கொன்றை மரத்துக்கடியில் நின்று, அன்பினால் இளகிய மனதை உடையவராய்ப் புல்லாங்குழலில் இசையமைத்துப் பஞ்சாட்சரமாகிய ஐந்தெழுத்தையும் பொருத்தி வாசித்தார். ஆனாயர் வேய்ங்குழலில் பலவகைப்பண்களை அமைத்தும் மந்தரம், மத்திமம், தாரம் என்னும் மூவகை அளவுகளைப் பொருத்தியும். பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு வண்ணம் என்னும் இசை வகைகளை இனிய நாதத்தில் அமைத்தும் வாசித்தார். அதிமதுரமான இசைவெள்ளம் எல்லா உயிர்களின் செவியிலும் தேவாமுதம்போல் புகுந்து உருக்கியது. இதை "சராசரங்களெல்லாம் தங்க வரும் தங்கருணை அடுத்த இசையமுதளித்துச் செல்கின்றார்" என்று சேக்கிழார் கூறுகிறார். இத்தகைய இசையமுதைக்கேட்ட பசுக்கள், கன்றுகள், எருதுகள், மயிற் கூட்டங்கள், பறவைகள் முதலியன தம் தொழிலை மறந்து அவர் பக்கத்தில் சேர்ந்தன. இடையர்களும் மெய்ம்மறந்து நின்றனர். விஞ்சையர், சாரணர் முதலியோரும் விமானத்திலேறி வந்தனர். கொடிய விலங்குகளும், இசையால் தம் பகையை நீக்கி உறவாடலாயின. பாம்பும்-மயிலும், சிங்கமும்-யானையும், மானும்-புலியும் நட்பாயின. இவ்வாறு சராசரங்கள் எல்லாம் ஆனாயர் குழலின் இசையால் பரவசமாயின.

இசைக்கருவிகளில் குழலும், யாழும் இனிதென்பர். இனிய குழற்கருவியில் இனிய சுரங்களை அமைத்துத் தெய்வச் சிந்தனையுடன் பஞ்சாட்சரத்தையும் சேர்த்து வாசித்ததால், எல்லாவற்றையும் கடந்த இறைவனும் இந்த இசையைக் கேட்டுத் தேவியுடன் இடப வாகனத்தில் எழுந்தருளிக் காட்சி கொடுத்து "இந்நின்ற நிலையே நம்பால் அணைவாய்" என்று அருளிச்செய்ய, ஆனாயரும்

வேய்ங்குழல் வாசித்தபடியே கைலாயம் சென்ருர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஆனுயர் ஒருவராக விளங்குகிருர். "அலைமலிந்த புனல்மங்கை ஆனுயர்க்கடியேன்" என்று சுந்தரர் போற்றுகின்ருர். ஆனுயருடைய விரிவான வரலாற்றைப் பெரிய புராணத்தில் காணலாம். இவருடைய திருவிழா ஆண்டுதோறும் கார்த்திகை மாதம், அஸ்த நட்சத்திர நாளில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அன்றைக்கு விசேட பூஜைகளும், இரவில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் நிகழும்.

*"மங்கலவூர் நன்னுடு மன்னுகோ பாலர் குலந்*
*தங்குமா னுயர் சரக்கொன்றைத்—துங்கமரம்*
*கண்டுசிவ னைந்தெழுத்தைக் கான்வேய்ங் குழலூத*
*அண்டர்பிரான் வீடளித்தான் அன்று"*

(பெரிய புராண சார வெண்பா)

இவ்வரலாறுகளையல்லாமல் பரசுராமர் இத்தலத்துப் பெருமானை வழிபட்டுப் பரசு பெற்றுள்ளார். பரசுராமர் தன் தாயைக் கொலை செய்த கொலைப்பாவம் நீங்கப் பெற்ருர். இதனுல் இத்தலம் பரசுராமீஸ்வரம் எனப் படும். சண்டேஸ்வரர், இலக்குமி, குபேரன், சைமினி முனிவர் ஆகியோரும் வழிபட்டுப் பேறுபெற்றுள்ளார் கள்.

## 14. கல்வெட்டுக்கள்

இத்தலத்தைப் பற்றிய 13-தமிழ்க் கல்வெட்டுக்கள் சுவாமி கோயிலின் விமானச் சுவர்களில் உள்ளன. அவை கள் தென்னியந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் 1929-30 ஆண்டில் 243 முதல் 255 வரையிலுள்ள எண் களாக சர்க்காரால் நகல் எடுக்கப்பெற்றுள்ளன. இக் கல்வெட்டுக்களால் பழமையான பல செய்திகளை அறியலாம்.

1. ஸ்ரீ சாமவேதீஸ்வரர் கோயில் விமானத்தின் வட சுவரில் "பூமருவியபொழில்ஏழும்" என்று தொடங்கும் கல்வெட்டில், சோழ மன்னன் பரகேசரி வர்மன் என்னும் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜராஜ தேவனது 3வது ஆட்சியாண்டில், மிதுனம்-மிருகசீரிடம்-சதுர்த்தசி சேர்ந்த திங்கட்கிழமை நாளில், உலகுடைமுக்கொக்கிலானடி வள நாட்டில், கலார் கூற்றத்தைச் சேர்ந்த திருமங்கலம் பரசுராமீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு கிராம சபையாரால் நிலம் விற்பனை செய்த விவரமும், வரியின்றிச் சில நிலங்கள் தானம் செய்த விவரமும் உள்ளன. ஷை அரசனது 12-வது ஆண்டில் விருச்சிகம்-ரேவதி-ஏகாதசி சேர்ந்த வியாழக்கிழமையில் நிலம் விற்பனை செய்தது.

2. ஷை இடத்தில் "புகழ்மாது விளங்க" என்னும் கல்வெட்டில் பரகேசரி வர்மன் - குலோத்துங்க சோழ தேவனது 17-வது ஆண்டில், துலா - மகம் - சதுர்த்தி சேர்ந்த வியாழக்கிழமையில் திருமங்கலம் திருவயோத்தி ஆழ்வார் கோயிலில் கிராம சபையார் கூடிப் பரசுராமீஸ்வர மகாதேவர்க்கு வரியின்றி நிலம் விற்பனை செய்தது.

3. ஷை விமானத்தின் மேல் சுவரில், ராஜராஜ தேவனது 22-வது ஆண்டில், மேஷம்-சப்தமி-பூசம் சேர்ந்த வியாழக்கிழமையில் வடகரை ராஜராஜ வள நாட்டில், கலார் கூற்றத்தைச் சேர்ந்த திருமங்கலம் திருமழுவுடைய நாயனார் கோயிலில் பிரதிட்டை செய்துள்ள உலகுடையநாயகி அம்மனுக்குப் பூஜைகளுக்காகத் தென்கரை பாண்டிகுலாசனி வளநாட்டில், எயில் நாட்டைச்சேர்ந்த சந்திரலேகை அம்பலத்தாடுவான் சீராமதேவன் என்னும் கலிங்கராயன் என்பவனால் நிலம் தானம் செய்தது.

4. ஷை இடத்தில் 'திருமன்னி வளர' என்னும் கல்வெட்டில் ராசேந்திர சோழ தேவனது 30-வது ஆண்டில் ராஜாஸ்ரய வள நாட்டில் கலார் கூற்றத்தைச் சேர்ந்த தாமோதரமங்கலத்துச் சபையாரால் திருமங்கலம் பரமேஸ்வரர் கோயிலுக்குச் சந்திரசேகர தேவரின் பூஜைகளுக்காக வரியின்றி நிலம் வழங்கியது. கோயிலில் விளக்கெரிப்பதற்கு 20 பொற்காசுகள் வழங்கியது. மேலும் கோயிலில் ஆடவல்லார் ஆகிய நடராஜருக்கு முக்கிய நாட்களில் பூஜை செய்யவும், பரஞ்சோதி மாதத்தில் விழா நாட்களில் அடியார்களுக்கு உணவளிக்கவும் கலார் கூற்றத்தைச் சேர்ந்த நகர் ஊரவரால் திட்டம் அமைத்தது.

5. ஷை இடத்தில் தென்புறம் — மேல்புறம் சுவர்களில் 'திருவளர்திரள்புயத்து' என்ற கல்வெட்டில் ராஜகேசரி வர்மன் வீரராஜேந்திர தேவனது 3-வது ஆண்டில் ராஜாஸ்ரய வள நாட்டில் திருமங்கலம் பரசுராமீஸ்வரம் உடைய மகாதேவர் கோயிலில் நந்தா விளக்கெரிக்க கருக்கன்குடி செம்பியன் முல்லையூர் நாட்டு மூவேந்த வேளானிடமிருந்து கோயிலார் பசுக்கள் பெற்றுக் கொண்டது.

6. ஷை தென் சுவரில் ராஜராஜகேசரி வர்மனது 5-வது ஆண்டில், சிதைந்த கல்வெட்டில் திருமங்கலம் கோயில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் ஓர் கல்வெட்டில் ஓர் அரசனது 15-வது ஆண்டில் இக்கிராமத்திலுள்ள கள்வன்-நந்தீஸ்வரன்-சங்கரநாராயணன் பெயர் கூறப்பட்டுள்ளது.

7. ஷை சுவரில் 'திருமன்னி வளர' என்னும் கல்வெட்டில் முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தில்

மார்கழி மாதம் ரேவதி முதல் 7 நாட்கள் வரையில் மூர்த்திகளின் அபிஷேகத்திற்காகத் திருமங்கலம் சபை யாரால் கோயிலுக்கு நிலம் வழங்கியது.

8. ஷை இடத்தில் ராஜராஜகேசரி வர்மனது 5-வது ஆண்டில் பரசுராமீஸ்வரக் கோயிலில் விளக்கெரிக்கப் பட்டணக் கூற்றத்தைச் சேர்ந்த நாகப்பட்டினம் பட்டணம் கிழான் — கருவூர்க்கந்தழி என்பவனால் பொன் வழங்கப்பெற்றது.

9. ஷை இடத்தில் ராஜராஜராஜகேசரி வர்மனது 15-வது ஆண்டில் 'திருமகள் போல' என்னும் கல்வெட்டில் வடகரை மழ நாட்டில், கிழார் கூற்றத்தைச்சேர்ந்த திருமங்கலம் பரசுராமீஸ்வரக் கோயிலில் நந்தா விளக்கெரிப்பதற்கும், விசேட நாட்களில் அபிஷேகம் செய்வதற்கும், உத்தம சோழனின் தாயார்—பராந்தகன் மாதேவடிகள் என்னும் செம்பியன் மகாதேவியாரால் வரியின்றி நிலம் தானம் செய்தது.

10. ஷை இடத்தில் 'புகழ்மாது விளங்க' என்னும் கல்வெட்டில் குலோத்துங்க சோழன்—ராஜகேசரி வர்மனது 46-வது ஆண்டில் மிதுனம்-சதுர்த்தி-மகம் சேர்ந்த வியாழக்கிழமையில், உலக முழுதுடை வள நாட்டில் கலார் கூற்றத்தைச் சேர்ந்த திருமங்கலம், திருவயோத்தியாழ்வார் கோயிலில், கிராம சபையார் கூடிப் பலரிடமிருந்து நிலத்தை வாங்கிப் பரசுராமீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு வரியின்றிச் சேர்த்தது.

11. ஷை இடத்தில் கீழ் சுவரில் திரிபுவனச் சக்கரவர்த்தி ராஜாதிராஜ தேவனது 6-வது ஆண்டில் கார்த்திகை நாளில் திருமழுவுடைய மகாதேவர் கோயிலின் சிவப் பிராமணர்கள், அமாவாசை நாட்களில் கோயிலில்

விசேட பூஜைகள் நடத்துவதற்கு ஒப்புக்கொண்டு, அத்ரேயன் நாராயண யக்ஞ பட்டனிடமிருந்து பொன் பெற்றது.

12. ஷை இடத்தில் விக்கிரம சோழ தேவனது 14-வது ஆண்டில் திரிபுவனம் முழுதுடைய வள நாட்டில் கலார் கூற்றத்தைச்சேர்ந்த திருமங்கலம் பரசுராமீஸ்வரர் கோவிலுக்கு அர்ச்சன போகமாக நிலம் வழங்கியது.

13. நுழைவாயில் மண்டபத்துக் கீழ் சுவரில், மதுரை நாயக்க வம்சத்து விசுவநாத கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் சகம் 1488-பிரபவ-சிம்மம்-தசமி-புனர்வசு சேர்ந்த வெள்ளிக்கிழமை நாளில் ராஜராஜ வள நாட்டில், கீழ்ப் பாலாற்றின் பிரிவான கலார் கூற்றத்தைச் சேர்ந்த திருவிருந்தமங்கலம் கோயிலுக்குரிய நிலங்களுக்கு நீராணிக்கம் என்னும் தண்ணீர் வரி விலக்கியது. இது அரசனது கீர்த்தியின் நினைவுக்காக ஏற்பட்டது.

இக்கல்வெட்டுக்களால் இத்தலப்பகுதி ராஜராஜ வள நாடு, ராஜாஸ்ரய வள நாடு, வடகரை மழ நாடு, உலக முழுதுடை வள நாடு, திரிபுவன முழுதுடை வள நாடு, உலகுடை முக்கொக்கிலானடி வள நாடு, தென் கரை பாண்டிகுலாசனி வள நாடு என்னும் பெயர்களால் வழங்கப்பெற்று வந்தன. திருமங்கலம் கலார் கூற்றத்தைச் சேர்ந்ததென்றும், நகர்க் கிராமமும், தாமோதர மங்கலமும் இக்கூற்றத்தைச் சேர்ந்ததென்றும் தெரிய வருகிறது. திருமங்கலத்துக்குப் பரசுராமீஸ்வரம், திருவிருந்தமங்கலம் என்றும், இறைவனுக்குப் பரசுராமீஸ்வரத்து மகாதேவர், திருமழுவுடைய மகாதேவர் என்றும், நடராஜருக்கு ஆடவல்லார் என்றும், பெருமாளுக்குத் திருவயோத்தியாழ்வார் என்றும் பெயர்கள் வழங்கி

வந்தன. சோழ மன்னர்களான ராஜ ராஜ தேவ்ன், குலோத்துங்க சோழ தேவ்ன், ராஜேந்திர சோழ தேவன் வீர ராஜேந்திர தேவன், ராஜாதிராஜ தேவ்ன், விக்கிரம சோழ தேவன், விசுவநாத கிருஷ்ணப்ப நாயக்கன் ஆகிய இவர்கள் காலத்தில் கோயில் பூஜைகளுக்கும், அபிஷேகத்திற்கும், நந்தா விளக்கெரிக்கவும், உணவளிக்கவும், நிலங்களும், பொற்காசுகளும், பசுக்களும் கோயிலுக்கு வழங்கப் பெற்றன. பல கிராமங்களின் பெயர்களும், தானம் செய்த பல அறவோர்களின் பெயர்களும் அடங்கியுள்ளன.



## 15. துதிப் பாடல்கள்

### விநாயகர்

1. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

(இரட்டைமணிமாலை.)

### முருகன்

2. பன்னிரு கரத்தாய் போற்றி
பசும் பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணை ஆறு
முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணுள்
இருக்குமா மணியே போற்றி

(திருச்செந்தூர்ப் புராணம்.)

### நடராஜர்—(ஆடவல்லார்)

3. உலகெலா முணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரிய புராணம்.)

### சிவபெருமான்

4. காவி ரியின் வட கரைக்காண் தகு
மாவிரியும் பொழில் மங்கலக்குடித்
தேவரியும் பிரமனும் தேடொணாத்
தூவெரிச்சுடர்ச் சோதியுட் சோதியே.

5. செல்வம் மல்கு திருமங்கலக்குடி
செல்வம் மல்கு சிவநிய மத்தராய்ச்
செல்வம் மல்கு செழுமறையோர் தொழச்
செல்வன் தேவியொடுந் திகழ் கோயிலே.
(திருநாவுக்கரசர்.)

6. குலந்தரு நீதிமிக்க குணந்தரும் வேதஞ் சொல்லும்
பலந்தரும் உயர்ந்த சாயுச்சியந்தரும் பழுதிலாத
தலந்தரும் எல்லாம் வல்ல சயந்தரும் நிறைந்தசெல்வ
நலந்தரும் பெருமைகுன்று நயந்தரு நமச்சிவாய.
(பழைய திருவிளையாடல் புராணம்.)

## சாம வேதீஸ்வரர்

7. ஏகமாக இருந்திசைக்கும் இனிய சாமவேதத்தைச்
சாகையோ ராயிரமாக்கித்தக்க கரும காண்டமுநன்
ருக மீமாங்கி சத்தானிச் சயிக்கப்பட்டதாப் பண்ணிப்
போகம் வீடு வேட்டவர்தம் பொருட்டு விளக்கு
வானதனல்

8. தக்கபனச வனத்தாற்குச் சாமவேதீச்சுர னெனவும்
தக்கதிரு மங்கலந் தனச்குச் சாமவேத புரமெனவும்
பொக்க மகன்றோர் எடுத்துரைப்ப புலவர்க்கரசே
[அத்தலத்து
முக்கண் ஒருவர் பூசனையம் முனிவனருளாற் புரிந்தேகி

9. கங்கையைச் சடையில் வைத்த
கடவுளே சரணம் தெய்வக்
கொங்குயிர் கடுக்கை மாலைக்
குழகனே சரணம் பச்சை
மங்கையோர் பாகம் வைத்த
வள்ளலே சரணம் நாயேன்
இங்குனைச் சரணஞ் சார்ந்தேன்
என் பிழைபொறுத்தல் வேண்டும்.

10. வளங்கெழு ஞானத்தாலும்
வரமலி யோகத்தாலும்
விளங்கிய கருமத்தாலும்
மெய்த்தவ ராதியோர்கள்
உளங்கொடு வழிபாடாற்றும்
ஒருபெருங் கடவுள் நின்பால்
துளங்கலில்லாத அன்பும்
துறுத்துதல் வேண்டுமென்றான்.

11. சகலதத் துவத்தின் மாட்டும்
சார்ந்தசைக் கின்றான் யாவன்
சகலதத் துவத்தினானும்
சகலமும் படைப்பான் யாவன்
சகலதத் துவத்தினானும்
சார்தராத் தலைவன் யாவன்
சகலமும் யாவன் அந்தத்
தாணு நின் சரணம் போற்றி.
(பூவாளூர்ப் புராணம்.)

## தேவியார்

12 மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தியெந்நாளும் பொருந்துகவே.
(அபிராமி அந்தாதி)

13. மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்.
(பதிபசுபாச விளக்கம்)

## தக்ஷிணாமூர்த்தி

14. மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த்தாள் நிழல் அடங்கும் உண்மையைக்
கைம்மலர்க் காட்சியின் கருதுவ நல்கிய
செம்மலை யலதுளம் சிந்தியாதரோ.

(திருவானைக்கா புராணம்)

## நால்வர்

15. பூழியர்கோன் வெப்பொழித்த
புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில்
அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர்
வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத
ஊரர் திருத்தாள் போற்றி

## ஆனாய நாயனார்

16. மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருள்
மருவுபுகழ் ஆனயர் வளர் ஆமேய்ப்பார்
கொங்கலர் பூந்திருக் கொன்றைமருங்கு சார்ந்து
குழலிசையில் ஐந்தெழுத்துங் குழையவைத்துத்
தங்குசரா சரங்களெலாம் உருகாநிற்பத்
தம்பிரான் அணைந்து செவிதாழ்த்தி வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந்தென்றும் ஊதப்
போதுக என்றருள உடன் போயினரே.

(திருத்தொண்டர் புராணசாரம்)

17. தாயவன் யாவுக்கும் தாழ்சடைமேல் தனித்
திங்கள் வைத்து
தூயவன் பாதந்தொடர்ந்து தொல்சீர் துளை யாற்பரவும்
வேயவன் மேல்மழநாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னையுவந் தாண்டருளினனே.
(திருத்தொண்டர் திருவந்தாதி)

18. ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.
(பெரிய புராணம்)

19. இனமார்ந்த பசுநிரையை வசமாக்க வேய்ங்குழலை
இசைத்தே பரன்முன்
முனமார்ந்த வனமாலை யணிமாயன் றினநாணின்
முழுகியேங்கக்
கனமார்ந்த ஐம்பதமும் வேய்ங்குழலின்
அமைத்திசைத்துக்
கசியுமன்பர்
மனமார்ந்த பசுபதியை வசமாக்கி னோர்வருமங்
கலத்தின் கீழ்சார்.
(உ. வே. சாமிநாதையர்)

20. கொன்றை சிவனைக் குழலூதி யைந்தினருள்
நின்ற வானாயர் நிலைபோற்றி.
(போற்றிக் கலிவெண்பா)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

திருமங்கலநாதர் திருவடி போற்றி.

நோபில் பிரஸ்
திருச்சி.